**07.04.2026**

**I.A.No.19/2026 மற்றும் 20/2026 in O.S.No.232/2012 மனு அனுமதிக்கப்பட்டு வா.சா.1 மாயவன் மீண்டும் அழைக்கப்பட்டு 9ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வா.சா.ஆ.11 முதல் 14 வரையிலான ஆவணங்களுக்கும் தாவாசொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணங்களில் உள்ள சொத்துகளும் தாவாசொத்துகளும் வேறு வேறு சொத்துகள் என்றால் சரிதான், அந்த சொத்துகளை விற்று தாவாசொத்துகளை கிரையம் பெற்றார். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் மேற்சொன்ன ஆவணங்களை பற்றி தெரியாது என்றால் குறுக்கு விசாரணை செய்யும்போதுதான் தாவாசொத்தின் மூல ஆவணங்களை தெரிந்து கொண்டு தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் மேற்சொன்ன ஆவணங்களை பற்றி நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. எனவே வா.சா.ஆ.11 முதல் 14 வரையிலான ஆவணங்களை பொறுத்து நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. 18.02.2020 தேதியன்று வா.சா.ஆ.11 மற்றும் 12 ஆவணங்களை பற்றி ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்துள்ளேன், ஆனால் அதற்கு முன்பே அந்த ஆவணங்களை பெற்றுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.11 முதல் 14 வரையிலான ஆவணங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் அதில் உள்ள முக்கியமான சங்கதிகள் தெரியும்,

அந்த ஆவணங்களில் உள்ள சொத்து விவரங்கள் மற்றும் பெயர் தெரியும். வா.சா.ஆ.11 ஆவணத்தில் ராமதாஸ் மேஸ்திரி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11ல் ராமதாஸ் மேஸ்திரி கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ.11ன்படி ராமதாஸ் மேஸ்திரி கிரையம் பெற்றார் என்று சொல்லுவது தவறு என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.11ன்படி நான் தான் ராமதாஸ் மேஸ்திரியின் வாரிசு என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணம் தேவராஜ் என்பவர் கிரையம் பெற்றார் என்றுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தின் அசல் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால்தான் தேவராஜ் என்பவருக்கு யார் கிரையம் கொடுத்தார் என்ற விவரம் தெரியும் என்றால் சரியல்ல. ராமதாஸ் மேஸ்திரியின் பூர்வீகம் நாமக்கல் மாவட்டம், நல்லப்பன்நாயக்கன்பட்டி ஆகும். அவர் செங்கல்பட்டு மாவட்டத்தில் முதலில் எங்கிருந்தார் என்றால் பாப்பாத்திகுளம், பின்பு பாளையேஸ்வரம் என்ற ஊரில் இருந்தார். பின்பு எனது அம்மா இறந்தபிறகு நெல்வாய் கிராமத்தில் குடியிருந்தார். ராமதாஸ் மேஸ்திரியின் அப்பா பெயர் துரைசாமி ஆகும்.

4. வா.சாஆ.12 ஆவணத்தின் சான்றிட்ட நகலை தான் தாக்கல் செய்துள்ளேன், அந்த அசல் ஆவணத்தை தாக்கல் செய்தால்தான் ஆவணத்தை பற்றி தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 மற்றும் 14 ஆவணத்தின் முன்னிலைக்கும் நான்தான் ராமதாஸ் மேஸ்திரியின் வாரிசு என்று கூற முடியாது என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ.11 மற்றும் 14

ஆவணத்தின் முன்னிலைக்கு எந்த பரிகாரமும் கோரமுடியாது, அந்த ஆவணத்தின்படி நான்தான் ராமதாஸ் மேஸ்திரியின் வாரிசு என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அப்போது எனக்கு 15 அல்லது 16 வயது இருக்கும்.